**குளியாப்பிட்டி பல்கலைக்கழகக் கல்லூரி - 2015**

தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்துடன் இணைந்த குளியாப்பிட்டி பல்கலைக்கழகக் கல்லூரியின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்தினத்தில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2008 இன் 31 ஆம் இலக்க தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழக அதிகாரச்சட்டத்தின் 47(2) ஆம் பிரிவு மற்றும் 2014 ஒக்தோபர் 03 ஆந் திகதிய 1882/51 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தலின் 17(2) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 49(1) ஆம் பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகக் கல்லூரியின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன. இது தொடர்பான விபரமான அறிக்கையொன்று பல்கலைக்கழக கல்லூரியின் பணிப்பாளருக்கு காலக்கிரமத்தில் வழங்கப்படும்.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டுத் நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கல்லூரியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கல்லூரியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காகவல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்தச் சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 ஸ்தாபித்தல்**

2008 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்கத் தொழில்சார் தொழில்நுட்பப் பல்கலைக்கழக அதிகாரச்சட்டத்தின் 5(உ) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 20 ஆம் பிரிவினது (1) ஆம் உப பிரிவின் கீழ் 2014 ஒக்தோபர் 1 ஆந் திகதி தொடக்கம் அமுலுக்கு வரும் பொருட்டு தொழில்சார் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தின் நிர்வாக சபையால் தயாரிக்கப்பட்ட 2014 இன் 1 ஆம் இலக்க தொழில்சார் தொழில்நுட்பப் பல்கலைக்கழகக் கல்லூரிச் சட்டவாக்கத்தின் கீழ் அதன் இணைந்த நிறுவகமாக குளியாப்பிட்டிய பல்கலைக்கழகக் கல்லூரி ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. தொழில்சார் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தால் அங்கீகரிக்கப்பட்ட தேசிய தொழில்சார் தகைமைகள் 5, 6 மற்றும் 7 ஆம் மட்டத்திலும் அதற்குச் சமமான மட்டத்திலுமான தொழில்நுட்பக் கற்கை நெறிகளைச் செயற்படுத்துவது பிரதான நோக்கமாக உள்ளது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 அபிப்பிராயம்**

குளியாப்பிட்டிப் பல்கலைக்கழகக் கல்லூரியின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

கல்லூரியின் குழாம் வாகனத்திற்காக மீளாய்வாண்டில் ரூபா 126,210 பெறுமதியான 1,147 லீற்றர் எரிபொருள் பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும், நாளாந்த ஓட்ட அட்டவணை மற்றும் பிரயாணம் தொடர்பான மாதாந்த பொழிப்புகள் குறித்த பிரகாரம் தயாரிக்கப்படாமையின் காரணமாக எரிபொருளின் பயன்பாடு தொடர்பாக சரியான தன்மையினை உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

**3. நிதி மீளாய்வு**

**3.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான பல்கலைக்கழகக் கல்லூரியின் நிதி விளைவு ரூபா 667,134 பற்றாக்குறையாக இருந்தது.

**4. செயற்பாட்டு மீளாய்வு**

**4.1 செயலாற்றல்**

2014 இன் 01 ஆம் இலக்க தொழில்சார் தொழில்நுட்பப் பல்கலைக்கழக கல்லூரிச் சட்டவாக்கத்தின் பிரகாரம் தேசிய தொழில் தகைமைகள் 5, 6 மற்றும் 7 ஆம் மட்டங்களின் பாடநெறிகள் மற்றும் அதுவும் அதற்குச் சமமான மட்டங்களில் வேறு தொழில்நுட்பப் பாடநெறிகளை நடாத்துதல் கல்லூரியின் நோக்கங்களாகக் காண்பிக்கப்பட்டிருந்தது. அந்த நோக்கங்களை நிறைவேற்றும் செயலாற்றல் தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட வகையில் கல்லூரியினால் தேசிய தொழில் தகைமைகள் 5, 6 மற்றும் 7 ஆம் மட்டங்களில் பாடநெறிகள் மற்றும் அதற்குச் சமமான மட்டங்களில் வேறு 09 தொழில்நுட்ப பாடநெறிகள் மீளாய்வாண்டின் போது அறிமுகப்படுத்தப்பட்டிருந்த போதிலும், அதில் 07 பாடநெறிகளுக்காக மாத்திரம் 108 மாணவர்கள் உள்ளடங்கியிருந்தனர். அந்த மாணவர்களில் 33 பேர் பாடநெறிகளை விட்டுச் சென்றிருந்தனர்.

(ஆ) ரூபா 124,114,537 பெறுமதியான கற்பித்தல் உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டு ஆய்வு கூடம் மற்றும் தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் ஸ்தாபிக்கப்பட்டிருந்த போதிலும், ஒரு பாடநெறிக்கு உள்ளீர்க்கப்பட்ட ஒரேயொரு மாணவரும் அப்பாடநெறியை விட்டுச் சென்றமை மற்றும் 02 பாடநெறிகளுக்கு மாணவர்கள் விண்ணப்பிக்காமை என்பவற்றின் காரணமாக மீளாய்வாண்டில் 03 பாடநெறிகளை நடாத்துவதற்கு முடியாதிருந்தது.

## 4.2 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பல்கலைக்கழக கல்லூரியில் மோட்டார் வாகன தொழில்நுட்பப் பாடநெறியின் Wheel Alignment பிரிவிற்காக ரூபா 1,435,000 பெறுமதியான உபகரணங்கள் 2015 மார்ச் 24 ஆந் திகதியளவில் கிடைத்திருந்த போதிலும், அந்த உபகரணங்கள் பயன்படுத்தக்கூடிய NVO 5 மற்றும் 6 ஆம் மட்டங்களில் மாணவர்களைச் சேர்ப்பதற்கு திட்டமிடப்படாமையின் காரணமாக, அந்த உபகரணங்கள் கணக்காய்வுத் திகதியான 2016 மே 13 ஆந் திகதி வரையிலும் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கட்டிடத் திட்ட தொழில்நுட்ப பாடநெறிக்காக கிடைக்கப்பெற்ற ரூபா 6,381,800 பெறுமதியான பொருட்கள் மற்றும் உபகரணங்களின் இருப்பொன்று கணக்காய்வுத் திகதியான 2016 மே 11 ஆந் திகதி வரையிலும் பிரதான களஞ்சியத்தில் பயன்பாடின்றிக் காணப்பட்டது. கட்டிட திட்ட தொழில்நுட்ப விடயத்திற்காக நியமிக்கப்பட்ட மாணவர்களின் அளவு குறைவடைந்தமையால் அந்த விடயங்களுக்குரிய செயன்முறை நடவடிக்கைகள் நிர்மாண தொழில்நுட்ப மாணவர்களுடன் ஒன்றிணைக்கப்பட்டு அந்த கற்பித்தல் உபகரணங்கள் பயன்படுத்தப்பட்டதாக கல்லூரியின் பணிப்பாளரினால் கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

## 4.3 முகாமைத்துவச் செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பல்கலைக்கழக கல்லூரி அமைந்துள்ள காணி மற்றும் கட்டிடங்கள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பல்கலைக்கழகத்திற்கு கையளிக்கப்படாதிருந்ததுடன் கையளிக்கும் நடவடிக்கைகள் தாமதமடைந்தமை அதன் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு பாதகமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) திறன் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சிலிருந்து வழங்கப்பட்ட ரூபா 15,150,000 பெறுமதியான 02 வாகனங்களின் உரித்து கல்லூரிக்கு கையளிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.4 பதவியணியினர் நிர்வாகம்

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கல்லூரியின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 53 ஆகவும் உள்ளபடியான பதவியணியினர் 32 ஆகவும் இருந்ததுடன் அதில் கல்விசார் பதவியணியில் 16 வெற்றிடங்களும் கல்விசாரா பதவியணியில் 05 வெற்றிடங்களும் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. கற்கை நடவடிக்கைகளுக்காக வெளிவாரி விரிவுரையாளர்களின் உதவி பெறப்பட்டிருந்ததுடன் கல்விசார், கல்விசாரா மற்றும் நிர்வாக நடவடிக்கைகளை முறையாகவும் செயற்திறனாகவும் நடாத்திச் செல்வதற்கு வெற்றிடங்களை துரிதமாக நிரப்ப வேண்டியமை அவதானிக்கப்பட்டது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 கணக்காய்வுக் குழு

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 7.4. ஆம் பந்தியின் பிரகாரம் கணக்காய்வுக் குழு நியமிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

பல்கலைக்கழக கல்லூரியினால் மீளாய்வாண்டிற்கான செலவின மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.2 ஆம் பந்தியின் பிரகாரம் பாதீடொன்று தயாரிக்கப்பட்டு உரிய ஆண்டு ஆரம்பிப்பதற்கு 03 மாதங்களுக்கு முன் கட்டுப்பாட்டுச் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது கல்லூரியின் பணிப்பாளரது கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| | முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | பாதீட்டுக் கட்டுப்பாடு | பாதீடொன்று தயாரிக்கப்படாமை |
| (ஆ) | பதிவேடுகளைப் பேணல் | பேரேட்டுக் கணக்கிற்காக சரியான குறியீட்டு இலக்க முறைமையொன்று பயன்படுத்தப்படாமை மற்றும் பேரேட்டுக் கணக்குகள் முறையாகப் பேணப்படாமை |
| (இ) | முற்பணம் வழங்குதல் | முற்பணம் வழங்கும் சரியான முறைமையொன்று நிறுவனத்தினால் அறிமுகப்படுத்தப்படாமை |